**செய்தி வெளியீடு எண் : 1377** **நாள் : 11.08.2022**

## செய்தி வெளியீடு

# 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தியமைக்காக வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை தமிழக மக்களும், அரசும் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளார்கள். உலகெங்கிலும் இருந்து இந்த போட்டியில் பங்கு பெற்றவர்களை வரவேற்று, நமது மகத்தான கலாச்சாரத்தையும் விருந்தோம்பல் பண்பையும் பறைசாற்றியமைக்கு எனது பாராட்டுக்கள் - என மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சமூக வலைத்தளப் பதிவு மூலம் தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.

இதற்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத்தளப் பதிவு மூலம் வெளியிட்டுள்ள பதிவு.

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே, தங்களது கனிவுமிகு பாராட்டுகளுக்கு மிக்க நன்றி.

விருந்தோம்பலும் தன்மானமும் தமிழர்களின் இணைபிரியா இருபெரும் பண்புகள் ஆகும்!

தொடர்ச்சியான உங்களது ஆதரவையும், இதுபோல இன்னும் பல உலக அளவிலான போட்டிகளை நடத்தும் வாய்ப்புகளைத் தமிழ்நாட்டுக்கு வழங்குமாறும் தங்களைக் கோருகிறேன்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in